


**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்


*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***
*2020 ஜனவரி (தை) மாதத்தின் கருப்பொருள்:*
***நமது உள்ளத்தையும் கண்களையும் திறப்போம்***

**<u>பங்கு அலுவலக நேரம்</u>**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**<u>இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:</u>** **ஆண்டவரின் திருக்காட்சி விழா** **சனி 04-01-2020 - ஞாயிறு 12-01-2020**

எசாயா : 60: 1-6 தி.பா: 72: 1-2, 7-8, 10-11, 12-13 எபேசி 3: 2, 3, 5, 6 மத் : 2: 1-12

**" ஆண்டவரே எல்லா இனத்தவரும் உமக்கு ஊழியம் செய்வார்கள்." - தி.பா 72**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 04 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/<br>திருப்பலி (திருவழிபாட்டுப் பணிக்குழு) | |
| ஞாயிறு | 05 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (திருவழிபாட்டுப் பணிக்குழு)<br>திருப்பலி (ஆ) (திருவழிபாட்டுப் பணிக்குழு)<br>திருப்பலி (சீ)<br>திருப்பலி (தே.மொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 06 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 07 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 08 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 09 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 10 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) புனித லூர்து அன்னை சிற்றாலயம் - சாகா*** |

**ஆண்டவரின் திருமுழுக்கு**

எசாயா : 42: 1-4, 6-7 தி.பா: 29: 1a-2, 3ac-4, 3, 9b-10 தி.ப 10: 34-38 மத் : 3: 13-17

**" ஆண்டவர் தமது மக்களுக்கு அமைதி அளித்து ஆசி வழங்குவாராக." - தி.பா 29**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 11 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/<br>திருப்பலி (இளைஞர் பணிக்குழு) | |
| ஞாயிறு | 12 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (புனித அந்தோணியார்)<br>திருப்பலி (ஆ) (புனித டேவிட்)<br>திருப்பலி (சீ)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

## 2020 ஜனவரி *<u>(தை) மாத செய்திகள் / நிகழ்வுகள்</u>*

1. பங்கு காணிக்கை:
   அ) 24 டிசம்பர் 2019 ரிம: 21,064.30 தித்தி ரிம: 161.00
   ஆ) 25 டிசம்பர் 2019 ரிம: 11,337.45
   இ) 28/29 டிசம்பர் ரிம: 9,862.10 தித்தி ரிம: 307.00

   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக

2) **சமூக அக்கறைப் பணிக்குழுவினரின் பணிக்காக 04/05** ஜனவரி திருப்பலிகளில் இரண்டாவது காணிக்கை எடுக்கப்படும்.

   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக

3) அதிசக்களில் மாதம் ஒருமுறை ஒன்றுகூடி அதிச சிந்தனைத் தாளைப் பகிர்ந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

***மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்***
*மரியம்மாள் நல்லதம்பி (இறப்பு 31/12/2019)*
*முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!*

4) <u>பமமேபகு உணவு வங்கி:</u> உங்களுடைய வற்றாத ஆதரவுக்கு மிக்க நன்றி. தொடர்ந்து, மைலோ, பால் மாவு, போத்தல் சமையல் எண்ணெய், சார்டின், பிஸ்கெட் போன்றவற்றை எந்த அளவுகளிலும் வழங்கலாம். தொடர்ந்து ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

5) <u>ஆலயத்தின் மறுசுழற்சி திட்டம்:</u> மாதத்தின் ஒவ்வொரு முதல் ஞாயிறு நடைபெறும். மறுசுழற்சிப் பொருட்களை சனி (04/01/20) அல்லது ஞாயிறு (05/01/20) கொண்டுவாருங்கள். ஒப்படைக்கும் இடம்: குருக்களின் கார் நிறுத்துமிடம்

6)<u>கத்தோலிக்க தலைவர்களுக்கு தூதுரைப்பணி முகாம்:</u> (தமிழில்) ஆர்வமுள்ளோர் உங்கள் பெயர்களைப் பதிந்துகொள்ளுங்கள். இறுதி நாள்: 15-01-2020 தொடர்புக்கு: ஸ்டீபன் டயோனிசப்பு ( 016-6110681)

இன்று திருப்பலியை வழி நடத்திய திருவழிபாட்டுப் பணிக்குழுவினருக்கு நம்முடைய நன்றிகள்

- **<u>அருட்பணி ஜோர்ஜ் ஹாரிசன் அவர்களுக்கு நம்முடைய நன்றிகள் உரித்தாகுக!</u>** கடந்த நான்கு ஆண்டுகளாக மினவுதல் தேவாலயப் பங்கிற்கும் மக்களுக்கும் நீர் அளித்த உம்முடைய அயராதப் பணிக்கு நன்றி கூறுகிறோம். அன்போடும், ஊக்கத்தோடும் எங்களை வழி நடத்தினீர். உம்முடைய பிரிவு எங்களுக்கு வருத்தமாக இருந்தாலும், உரோமை நகரில் நீர் தொடரப்போகும் உம்முடைய புதிய பணிக்காக நாங்கள் உம்மை வாழ்த்துகிறோம். இறைவனின் ஆசீர் எப்போதும் உங்களை மகிழ்ச்சியில் வழி நடத்திட செபிக்கிறோம்.
- <u>ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகள்</u> (அனைத்து மொழிகளில்) ஆரம்பம்: - 05-1-2020 (ஞாயிறு) அந்தந்த வகுப்பறைகளில் பதிவுகள் நடைபெறும். வகுப்பறைகள் மற்றும் ஆலய வளாகத்தில் உள்ள மேசை நாற்காலிகளை பயன்படுத்தியபின் அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம். அவைகள் பழுதுபடுத்தாமல் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- <u>சிறப்புத் தூதுரைப்பணி ஆண்டு நிறைவு: பங்கு அளவில் - திருக்காட்சி விழா (ஜனவரி 5) திருக்காட்சி விண்மீன் -</u> கடந்த ஆண்டு தொடக்கத்தில் உங்களிடம் கொடுக்கப்பட்ட விண்மீனை கொண்டுவந்து மாதா கெபியின் முன் இருக்கும் குடிலில் வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- <u>கிறிஸ்துவ ஒற்றுமை செப வழிபாடு 2020</u> - சனிக்கிழமை 18 ஜனவரி இரவு 8.00 மணி: இடம்: புனித மாற்கு ஆலயம், சிரம்பான், அனைவரையும் கலந்துகொள்ள அழைக்கிறோம்.
- <u>திருமணத்திற்கு திட்டம் வைத்துள்ளீர்களா</u>? உங்களுடைய விவரங்களை பங்கு அலுவலத்தில் முதலில் பதிவு செய்யுங்கள். அதன்பின் குருவானவரை சந்திக்க முன்பதிவு செய்துகொள்ளுங்கள் (குறைந்தது திருமணத்திற்கு ஒரு ஆண்டுக்கு முன்) **<u>2020 ஆண்டில் திருமணம் புரிவோரின் கவனத்திற்கு:</u>** பங்கு குருவானவரை சந்திக்க முன்பதிவு செய்துகொள்ளுங்கள். திருமண முன் தயாரிப்பு வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.
- <u>அஷ்வின் சேவியர்</u> - திரு சேவியர் ரத்னம்/ நிர்மலா இவர்களின் மகன் (புளோசம் பார்க், புனித மார்டின் அதிச) பேராயர் ஜூலியன் அவர்களால் பினாங்கு குருத்துவ கல்லூரிக்கு 2020 பிப்ரவரியில் இணைய ஏற்றுக்கொண்டிருக்கிறார். அவரை வாழ்த்துவதோடு தொடர்ந்து அவரை நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்.

- குருக்களின் ஆண்டு மேய்ப்புப்பணி மா நாடு **(CAPA)** ஜனவரி 13-15 ,2020 கோலாலம்பூரில் , (APC) நடைபெறுகிறது.
- அதிச ஒருங்கிணைப்பாளர் குழு கூட்டம் 22-01-2020 இரவு 8.00 மணி - தேவாலய மண்டபம்